DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 13 /2025

Deposition of Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : ரெங்கராஜன் | Father's/Husband's Name : | முனியாண்டி |
| Village | : பெரியகுளம் | Taluk | : பெரியகுளம் |
| Caste | : | Calling | : தலைமை ஆசிரியர் |
| Religion | : | Age | : 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.04.2026

**முதல் விசாணை** :

நான் ஆண்டிபட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் பள்ளியில் ராமராஜ் மகன் பரமசிவம் 06.06.1994 ம் தேதி அனுமதிக்கப்பட்டிருக்கிறார். பரமசிவர் பெற்றோர் தரப்பில் கொடுத்த பள்ளியில் சேர்த்துக் கொள்வதற்காக கொடுத்த விண்ணப்பபம் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பரமசிவம் எங்கள் பள்ளியில் 5 ம் வகுப்பு வரை தேர்ச்சி பெற்றதற்கான மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மாற்று சான்றிதழ் **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சான்றிதழில் பரமசிவத்தின் தகப்பனார் பெயர் லெ. ராமராஜ் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பரமசிவம் ஆண்டிபட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 06.06.1994 முதல் 06.06.1997 ம் ஆண்டு வரை 6 முதல் 8 ம் வகுப்பு வரை படித்திருக்கிறார். அதன்பிறகு கடந்த 06.02.2003 ம் தேதி அவருக்கு எங்கள் பள்ளியிலிருந்து மாற்று சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அந்த மாற்றுச் சான்றிதழின் உண்மை நகல் **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் பள்ளியின் 1994 ம் ஆண்டிற்கான சேர்க்கை நீக்கல் பதிவேடு தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1994 ம்ஆண்டிற்கான சேர்க்கை நீக்கல் பதிவேட்டில் மேற்படி பரமசிவத்தின் பெயர் பதிவாகியிருக்கிறது. அவர் படித்த கால கட்டத்தில் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பழக்கம் எங்கள் பள்ளியல் இல்லை.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததால் தான் இந்த வழக்கில் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன். எதற்காக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் எங்கள் பள்ளியில் படித்த முன்னாள் மாணவர் ரா.பரமசிவம் என்பவரின் பள்ளி பதிவேடுகளை தாக்கல்செய்து சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்திலும் ரா.பரமசிவம் பெயரில் தான் இருக்கிறது. இந்த வ ழக்கின் வாதி பெயர் தெரியுமா என்றால் எனக்கு வந்த சம்மனில் ரா. பிச்சைமணி என்கிற பரமசிவம் என்று இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் ரா.பிச்சைமணி என்கிற பரமசிவம் என்றோ அல்லது ரா.பிச்சைமணி என்ற பெயரோ இருக்கிறதா என்றால் இல்லை. பொதுவாக பள்ளியில் சேர்ப்பதற்கு என்ன ஆவணம் கேட்போம் என்றால் எங்கள் பள்ளியில் 6ம் வகுப்பிலிருந்து தான் இருப்பதால் 5ம் வகுப்பு படித்து முடித்ததற்கான பள்ளி மாற்று சான்றிதழை கேட்போம்.

2) எங்கள் பள்ளியில் சேர்க்கும் போது முன்னாள் பள்ளியில் என்ன பெயர் பதிவாகியிருக்கிறதோ அதே பெயரை தான் எங்கள் பள்ளியில் பதிவு செய்வோம் என்றால் சரிதான். பள்ளியிலிருந்து வெளியேறும் போதும் அதே பெயரில் தான் மாற்று சான்றிதழ் வழங்குவோம் என்றால் சரிதான். இடையில் மாணவர் பெயரை மாற்றம் செய்ய வேண்டியிருந்தால் அதற்கான ஆவணம் கொடுத்தால் தான் மாற்றம் செய்வோம் என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 20.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.04.20 16:18:24 +0530

District Munsif,
Aundipatti.